| O.S.No. 438/2021 | PW3 : திருமதி. அமிர்தம்மாள்<br>க/பெ. திரு. ஆறுமுக பிள்ளை | 04-07-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>1 முதல் 5 மற்றும் 14 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் வடுவன்குடிசை கிராமத்தில் வசிக்கிறேன். எனக்கு திருமணமாகி சுமார் 50 ஆண்டுகள் இருக்கும். முனுசாமி பிள்ளை எனது தந்தை. என் தந்தைக்கு சொந்த ஊர் வடகண்டபுத்தூர். என் அப்பாவிற்கு 3 மகன்கள், 2 மகள்கள் வாரிசுகள் ஆகும். மூத்த மகன் 1-ம் பிரதிவாதி முனியப்பிள்ளை ஆவார். 2-வது மாயப்பிள்ளை, அவர் இறந்துவிட்டார். 3-வது வாதி சேட்டு ஆவார். எனது தாயார் பெயர் கண்ணம்மாள். மாயப்பிள்ளைக்கு மனைவி, மக்கள் இருக்கிறார்கள். என் அப்பா இறந்து சுமார் 25 வருடங்கள் இருக்கும். என் தந்தை இறந்த பிறகுதான் என் தாயார் இறந்தார். எங்களது குடும்பத்தில் படித்தவர் 1-ம் வாதி சேட்டு மட்டும்தான். 1-ம் வாதி சேட்டு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணி செய்து ஓய்வு பெற்றுவிட்டார்.

2. நன்னபிள்ளை எனது தாத்தா ஆவார். நன்னபிள்ளைக்கு நாராயண பிள்ளை, முனுசாமி பிள்ளை, அர்ஜுன பிள்ளை, கிருஷ்ண பிள்ளை ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். மேற்படி நபர்கள் பாகப்பிரிவினை செய்துகொண்டதில் கிராம காலனிக்கு ஓரமாக உள்ள 2 ஏக்கர் 60 சென்ட்டானது என் தந்தைக்கு பாகமாக வந்தது என்றால் சரிதான். மேற்படி சொத்தினை வைத்து எனது தந்தை, எனது தாயார் மற்றும் எனது தந்தை பெயரில் சில சொத்துக்களை கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். சில சொத்துக்களை என் பெரிய அண்ணன் முனியபிள்ளை பெயரில் என் தந்தை சொத்தினை கிரையம் வாங்கி வைத்தார்.

3. மேற்படி மகன்களுக்கு எனது தந்தை என் அப்பாவின் பெயரில் உள்ள சொத்துக்களை பாகம் பிரித்து கொடுத்துவிட்டார், ஆனால் எனது தாயார் பெயரில் உள்ள சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படவில்லை. மேற்படி பாகப்பிரிவினையானது என் தாய், தந்தையர் உயிருடன் இருந்தபோதே ஏற்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு அந்த பாகப்பிரிவினை ஏற்பட்டு சுமார் 35 ஆண்டுகாலம் இருக்கும் என்றால் அந்த 3 பேர் பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டதே எனக்கு தெரியாது. மேற்படி மூவரும் பாகப்பிரிவினை செய்துகொண்டார்களா இல்லையா என்பது குறித்து நாளது தேதி வரை எனக்கு தெரியாது. அதனால், யார் யாருக்கு எந்தெந்த சொத்து பாகமாக ஒதுக்கப்பட்டது என்று எனக்கு எதுவும் தெரியாது. அதேபோல், யார் யார் எந்தெந்த சொத்தினை அனுபவிக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் நான் வெளியூரில் இருப்பதால் அது எனக்கு தெரியாது.

4. நாங்கள் பாகப்பிரிவினை செய்துகொள்ளப்போகிறோம் என்று மேற்படி 3 பேரும் என்னை அழைத்து சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நான் வெளியூரில் இருப்பதால் எங்கள் குடும்பத்தில் என்ன நடந்தது என்று எனக்கு சரியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். என்னை 1-ம் வாதி சேட்டுதான் சாட்சியம் அளிக்க இந்நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார். நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் எனக்கு பாகப்பிரிவினை ஏற்பட்டது பற்றி தெரியாது என்றும், யார் யார் எந்த சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்று தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் அவ்வாறுதான் சாட்சியம் அளித்துள்ளேன்.

5. 1-ம் வாதிக்கும், 1-ம் பிரதிவாதிக்கும் என்ன பிரச்சனை என்றால் என் அம்மா பெயரில் உள்ள நிலத்தை பங்கு கொடுக்கவேண்டும் என்றுதான் பிரச்சனை ஏற்பட்டது. கடந்த 2, 3 வருடமாகத்தான் மேற்படி இருவருக்கும் பிரச்சனை, அதற்கு முன் சுமூகமாகத்தான் இருந்தார்கள். கடந்த 35 ஆண்டுகளாக இருவருக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. என் அம்மாவின் சொத்து எங்கு உள்ளது என்றால் குளத்திற்கு மேல்பக்கமாக உள்ளது. அது எவ்வளவு ஏக்கர் இருக்கும் என்றால் 1 ஏக்கர் மிச்சம் இருக்கும். அந்த சொத்தினை தற்போது யார் அனுபவித்து வருகிறார் என்றால் 1-ம் பிரதிவாதி முனியப்பிள்ளைதான் அனுபவித்து வருகிறார். என் தாய் தந்தையர் இறந்த பிறகு என் தாயார் பெயரில் உள்ள சொத்தினை 1-ம் பிரதிவாதி முனியப்பிள்ளைதான் அனுபவித்து வருகிறார். நானும், எனது அக்கா நவனீதமும் சொத்துக்களில் எந்தபாகமும் எங்களுக்கு வேண்டாம் என்றும், அண்ணன் தம்பிகளே எடுத்துக்கொள்ளுமாறு சொல்லிவிட்டோம் என்று சொன்னால் சரிதான்.

6. என் தாய், தந்தையர் உயிருடன் இருந்தபோதே என் அண்ணன்களுக்கு சொத்துக்களை தனித்தனியாக பிரித்து கொடுத்துவிட்டார்கள் என்றாலும், மேற்படி விஷயம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், 1-ம் வாதி அழைத்து வந்ததன்பேரில் எனக்க எந்த விஷயமும் தெரியாது என்று 1-ம் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கும் 1-ம் பிரதிவாதிக்கும் எந்த கஷ்டமும் இல்லை, அவருடன் நான் பேச்சுவார்த்தையில்தான் உள்ளேன். 1-ம் வாதி சாட்சியம் அளிக்க அழைத்தது குறித்து 1-ம் பிரதிவாதியிடம் போய் கேட்டீர்களா என்றால் இல்லை.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.07.04 13:19:28 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**செய்யாறு.**